செ.வெ.எண்:17 நாள்:7.08.2017

## சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக் குழு திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்காக திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எம்.நரசிம்மன் அவர்கள் தலைமையிலான சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக் குழு (2016-2017) குற்றாலத்திற்கு வருகை தரவுள்ளது.

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்ஆர்.இராஜா அவர்கள், சூலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.கனகராஜ் அவர்கள், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.குமரகுரு அவர்கள், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.அர.சக்கரபாணி அவர்கள், திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.சாமி அவர்கள், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.சுதர்சனம் அவர்கள், திருச்சுழி சட்டமன்ற உறுப்பினர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.பி.நந்தகுமார் அவர்கள், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.V.P.B.பரமசிவம் அவர்கள், நாமக்கல சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர் அவர்கள், வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ப.மனோன்மணி, மதுரை (வடக்கு) சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.வி.ராஜன் செல்லப்பா அவர்கள், கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.ராஜேஷ் குமார் அவர்கள் மற்றும் குடியாத்தம் (செ.வ) சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சி.ஜெயந்தி பத்மநாபன் அவர்கள் ஆகியோர் சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். மேலும் ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர்/பொதுக் கணக்குக் குழு தலைவர் திரு.கரி.இராமசாமி அவர்கள், பரமக்குடி (செ.வ) சட்டமன்ற உறுப்பினர்/பொது நிறுவனங்கள் குழு தலைவர் டாக்டர்.எஸ்.முத்தையா அவர்கள் ஆகியோர்களும் உறுப்பினர்களாக உள்ளார்கள்.

இக்குழு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பள்ளிக் கல்வி துறை, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆகிய துறைகளின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகளை 9.08.2017 அன்று பார்வையிடுகின்றனர். பின்னர் குற்றாலம் கலைவானர் அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களுடனான கூட்டம் நடைபெறுகிறது – என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்புத்துறை, திருநெல்வேலி.